# தென் துளிர்

மாதாந்த இதழ்

தென் துளிர்

மாதம் : ஆனி | இதழ் : 06





பிரதேச செயலகம் - தென்மராட்சி

நேர்மையான நிர்வாகம்-சிறந்த பொதுச்சேவை-மக்களின் நம்பிக்கை

# புகைத்தல் எதிர்ப்பு கொடிதின சேமிப்பு விழிப்புனர்வு

- "போதை பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்" எனும் தொனிப்பொருளில் தென்மராட்சி சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் வருடம் தோறும் நடாத்தி வரும் புகைத்தல் எதிர்ப்பு கொடிதின சேமிப்பு விழிப்புணர்வு ஆரம்ப நிகழ்வானது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் F.C.சத்தியசோதி அவர்களின் பங்குபற்றுதலுடன் பிரதேச செயலகத்தில் 01.06.2026 காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், கருத்திட்ட முகாமையாளர், வங்கி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், போதை தடுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர், CBO தலைவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதேச செயலகத்திலும் மற்றும் சாவகச்சேரி நகர் பகுதியில் விழிப்புணர்வு மற்றும் கொடி அணிவித்து உண்டியல் சேமிப்பு வேலைத்திட்டமும் இடம்பெற்றது.





# புகைத்தல் எதிர்ப்பு கொடிதின சேமிப்பு விழிப்புனர்வு

- "போதை பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்" எனும் தொனிப்பொருளில் தென்மராட்சி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் வருடம் தோறும் நடாத்திவரும் புகைத்தல் எதிர்ப்பு கொடிதின சேமிப்பு விழிப்புணர்வு நிகழ்வு மற்றும் கற்றல் உபகரணம் வழங்கல் நிகழ்வு மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் F.C.சத்தியசோதி அவர்களின் பங்குபற்றுதலுடன் வரணி வங்கி இராமாவில் பிரிவில் 02.06.2026 மாலை 2.30 மணிக்கு இராமாவில் முருகன் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள், CBO அங்கத்தவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர், தொடர்ந்து 2025ம் ஆண்டு கொடி தின சேமிப்பு நிதியிலிருந்து 92 வறிய மாணவர்களிற்கு ரூபா 382,790.00 பெறுமதியான புத்தகப்பை மற்றும் காலணிகள் வழங்கப்பட்டது





# மழை நீர் சேபரிப்பு தொட்டிகள் வழங்குதல் நிகழ்வு

- 03.06.2026 புதன்கிழமை எமது பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 03 பயனாளிகள் குடும்பத்தினருக்கு 5000 லீட்டர் கொள்ளளவுடைய மழை நீர் சேகரிப்பு தொட்டிகள் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ க.இளங்குமரன் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் குறிப்பாக தூயநீர் மற்றும் காலநிலை நடவடிக்கை ஆகியவற்றை அடைவதில் முக்கிய பங்காற்றும் இந் நடவடிக்கை வரட்சி காலங்களில் நீடித்த நீர் பாதுகாப்பை உறுதி செய்வதுடன் பெண்களின் நீர் சுமக்கும் சுமையை குறைத்து குடும்பப் பொருளாதாரத்தையும் மேம்படுத்துகின்றன. மேலும் ‘‘மழைநீரில் ஒரு துளியேனும் வீணாகக் கடலை அடையக்கூடாது’’ என்ற மன்னன் மகாபராக்கிரமபாகுவின் உயரிய நோக்கத்திற்கும் செயல் வடிவம் வழங்குகின்றது.





# மக்கள் பங்கேற்புடன் பூசைக்குளம் புனரமைப்பு

**ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைத்திட்டம். தென்மராட்சியில் மக்கள் பங்கேற்புடன் பூசைக்குளம் புனரமைப்புக் பணிகள் அங்குரார்ப்பணம்.**

இலங்கை அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு மற்றும் கிராமியப் பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளுக்கு அமைவாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) நோக்கி நகர்வை வலுப்படுத்தும் வகையிலும், யாழ்ப்பாணம், தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் பூசைக்குளத்தினை புனரமைக்கும் செயற்றிட்டம் 03.06.2026ம் திகதி காலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையில் பன்முக வறுமையை முற்றாக ஒழித்து, கிராமியப் பொருளாதாரத்தை சுயமாகக் கட்டியெழுப்பும் நோக்கில் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சினால் மக்களின் வரிப்பணத்திலிருந்து 25,000 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைத்திட்டங்கள் எனும் தேசிய திட்டம் கடந்த 2026 ஜுன் 02 அன்று நாடளாவிய ரீதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன் ஒரு கட்டமாக, தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவின் J/343 வரணி இயற்றாலை கிராம அலுவலர் பிரிவில் பருத்தித்துறை - கொடிகாமம் பிரதான வீதிக்கு அருகாமையில் சிட்டிவேரம் அம்மன் கோவிலுக்கு வடக்கு பக்கமாக அமைந்துள்ள பூசைக்குளத்தினை புனரமைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு 2026.06.03ம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணிக்கு மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ க.இளங்குமரன் அவர்களின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. சிட்டிவேரம் ஆலய குருவின் அருளாசியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆரம்ப விழாவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், வரணி இயற்றாலை கிராம அலுவலர் பிரிவின் பிரஜாசக்தி உறுப்பினர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் ஏனைய கிராம பிரிவுகளின் பிரஜாசக்தி தலைவர்கள்

எனப்பலரும் கலந்துகொண்டனர். மக்களின் நேரடிப் பங்கேற்புடன் கூடிய (People's Participation) இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 5 மில்லியன் நிதிஒதுக்கீட்டில் பூசைக்குளத்தினை புனரமைப்பதற்காக அமைச்சினால் கொள்கையளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இக்குளபுனரமைப்பின் மூலம் கோடை காலத்தில் தங்கு தடையின்றி கால்நடைகளுக்கான குடிநீர் கிடைப்பனவு உறுதிப்படுத்தப்படுவதுடன் நிலத்தடி நீர் பாதுகாப்பும் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.





# பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 03.06.2026 புதன்கிழமை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கௌரவ க.இளங்குமரன் (பா.உ) அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் பிரதேச செயலாளர் திரு. F.C சத்தியசோதி, சாவகச்சேரி நகரசபை தவிசாளர், உப தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் நகரசபை, பிரதேச சபையின் அழைக்கப்பட்ட கௌரவ உறுப்பினர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள்/ பிரதிநிதிகள், சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் அழைக்கப்பட்ட சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தலைமை உரையாற்றிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் அவர்கள் தென்மராட்சி பிரதேசம் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட 60 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி காணப்படுவதால் அதிகமான தேவைகளைக் கொண்டிருப்பதாகவும் இப்பிரதேச செயலகத்தை இரண்டு பிரதேச செயலகங்களாக உருவாக்க வேண்டிய அவசியத்தையும் அதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் முன்முயற்சிகள் தொடர்பாகவும் கருத்து தெரிவித்தார். இக்கூட்டத்தில் தொழில் முயற்சிக்கான அரசகாணி வழங்கல், பிரதேச தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலான செயற்றிட்டங்கள், முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்பட வேண்டிய பிரதேச சபையின் மற்றும் நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட வீதிகள், வயல் காணியை வீட்டுத்திட்ட நோக்கத்திற்காக (குடியிருப்பு நோக்கத்திற்காக) மேட்டுக்காணியாக மாற்றுவதற்கு விண்ணப்பித்த ஒருவருக்கான அனுமதி என்பவற்றிற்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

28.01.2026 அன்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாகவும் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டமானது பி.ப 12.30 மணியளவில் பிரதேச செயலாளரின் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.





# வீடமைத்தலுக்கான கட்டம் ஜை காசோலை

எமது பிரிவில் வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் ரூபாய் 2 மில்லியன் பெறுமதியான வீடமைத்தலுக்காக கட்டம் 111ல் தெரிவு செய்யப்பட்ட 27 குடும்பத்தினருக்கான முதலாம் கட்ட கொடுப்பனவுக் காசோலை வழங்குதலும் மற்றும் வீடமைத்தல் வழிகாட்டல் அறிவுறுத்தல் வழங்குதலும் 03.06.2026 புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கட்டம் 111ல் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டதுடன் இவர்களுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவான 400,000 ரூபாவிற்கான காசோலை தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ க. இளங்குமரன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது. தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு இவ்வமைச்சினால் கட்டம் 1ல் 29 வீடுகளும் கட்டம் 11ல் 34 வீடுகளும் வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டமானது இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கியுள்ள உடன்படிக்கையின்படி பின்வரும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நேரடியாகப் பூர்த்தி செய்கிறது. இலக்கு 1 (வறுமை ஒழிப்பு - No Poverty) விளிம்பு நிலை மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சொத்துரிமை மற்றும் உறைவிடத்தை வழங்கி வறுமையிலிருந்து மீட்டல்.

இலக்கு 6 (தூய நீரும் சுகாதாரமும் - Clean Water and Sanitation) வீடமைப்புடன் இணைந்ததாக நீர் வழங்கல் அமைச்சினால் சுத்தமான குடிநீர் மற்றும் முறையான சுகாதார வசதிகள் உறுதி செய்யப்படுதல்

இலக்கு 11(நிலையான நகரங்களும் சமூகங்களும் - Sustainable Cities and Communities) நலிவடைந்த சமூகங்கள் பாதுகாப்பான, மலிவு விலையிலான மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகளைப் பெறுவதை உறுதி செய்தல்.

தற்போதைய சவாலான பொருளாதாரச் சூழ்நிலையிலும், கிராமிய உட்கட்டமைப்பு மற்றும் அடிமட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் தனது தேசியக் கொள்கையில் அரசாங்கம் உறுதியாக பயணிக்கிறது என்பதை இச்செயற்றிட்டம் வெளிப்படுத்துகிறது.





# சர்வதேச சுற்றாடல் தினம்

05.06.2026 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சர்வதேச சுற்றாடல் தின நிகழ்வானது J/297 கைதடி நாவற்குழி கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்றது. இதில் சிரமதானம் மரநடுகை மற்றும் "சுற்றாடல் மாற்றங்களுக்கு எதிராக செயற்படுவோம்" என்னும் தொனிப்பொருளின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சியும் பிரதேச செயலாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் கிராம மட்ட உத்தியோகத்தர்கள், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், GTMS பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கடற்றொழிலாளர் சங்கறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வுக்கான மரக்கன்றுகளினை Green Layer சுற்றுச்சூழல் அமைப்பானது அன்பளிப்பாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# புகைத்தல் எதிர்ப்பு கொடிதின சேமிப்பு விழிப்புனர்வு

"போதை பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்" எனும் தொனிப்பொருளில் தென்மராட்சி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் வருடம் தோறும் நடாத்திவரும் புகைத்தல் எதிர்ப்பு கொடிதின சேமிப்பு விழிப்புணர்வு நிகழ்வு மற்றும் கற்றல் உபகரணம் வழங்கல் நிகழ்வு வரணி வங்கி மீசாலை கிழக்கு பிரிவில் 05.06.2026 மாலை 3.00 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முகாமைத்துவப் பணிப்பாளர், வங்கி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச்சங்க தலைவர், CBO அங்கத்தவர்கள், மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்நது 2025ம் ஆண்டு கொடிதின சேமிப்பு நிதியிலிருந்து 65 வறிய மாணவர்களிற்கு 270,870.00 ரூபா பெறுமதியான புத்தகப்பை மற்றும் காலணிகள் வழங்கப்பட்டது.





# அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

அரச அதிபர் வெற்றி கிண்ணம் - 2026 தொடரில் வலைப்பந்தாட்ட போட்டியானது தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் மட்டுவில் வளர்மதி மைதானத்தில் 06.06.2026 அன்று வெகுசிறப்பாக நடைபெற்றது.





# மருத்துவ உதவி அல்லாத கல்விக்கான

சனாதிபதி நிதியத்தின் பிரதேச செயலகம் வரை பன்முகப்படுத்துதல் திட்டத்தின் மூலம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மருத்துவ உதவி அல்லாத கல்விக்கான கொடுப்பனவாக இராமாவில் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த செல்வி. சிவகுமார் சபிசா என்பவருக்கு இரண்டாவது கல்விக்கான கொடுப்பனவாக ரூபா 5,000/- பெறுமதியான காசோலையும், வரணி இயற்றாலை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த செல்வன் சிவகுமார் ரஜீசன் மற்றும் செல்வி சிவகுமார் ரனுஷிகா ஆகியோருக்கு முதலாவது கல்விக்கான கொடுப்பனவாக ரூபா 5,000/_ பெறுமதியான இரண்டு காசோலைகளும் 08.06.2026ம் திகதி உதவி பிரதேச செயலாளர் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.





# மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப்போட்டிகள்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடாத்திய மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப்போட்டி 09.06.2026ம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் தேசிய கல்வியிற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளரும் சுன்னாகம் ‘‘வாழ்வகம்’’ விழிப்புல வலுவிழந்தோர் இல்ல தலைவருமான ஆறுமுகம் ரவீந்திரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திருமதி ருஷிறா குலசிங்கம் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக பொதுநலவாய நாடுகளிற்கிடையிலான கனிஸ்ட பிரிவு பளு தூக்கும் போட்டி 2026ல் வெண்கல பதக்கம் வென்றுள்ள வீரர் திரு.பரமலிங்கம் தாரகன் அவர்களும் தெற்காசிய தடகள Championship 2025 குண்டு எறிதல் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றுள்ள வீரர் திரு.சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் மைதானம் வரை அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், கொடியேற்றலுடன் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு விளையாட்டுக்கள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து விளையாட்டு போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்றது.

யாழ்.மாவட்ட மாற்றுத்திறனாளியின் திறன்களை மேம்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த தடகள விளையாட்டுப் போட்டியில், யாழ் மாவட்டத்தின் பிரதேச செயலக ரீதியான அணிகள் கலந்து கொண்டுள்ளன.

மேலும் தொடர்ந்து பி.ப 2.30 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. தென்மராட்சி பிரதேச செயலாளர் அவர்கள் மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





# இளைஞர் யுவதிகளுக்கான தொழில்முறை பயிற்சி

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நான்கு சமுர்த்தி வங்கிகளிற்குட்பட்ட கிராம பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர் யுவதிகளிற்கான தொழில்முறை பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு மதிப்பிற்குரிய உதவி பிரதேச செயலாளரின் பங்குபற்றுதலுடன் 09.06.2026 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் VTA பிரதி பணிப்பாளர், மாவட்ட செயலக கருத்திட்ட முகாமையாளர், தலைமையக முகாமையாளர், கருத்திட்ட முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வளவாளர்களாக மாவட்ட கருத்திட்ட முகாமையாளர், VTA பிரதி பணிப்பாளர் ஆகியோர் சிறந்த முறையில் விளக்கமளித்தார்கள்.





# போசாக்கு குறைபாடுள்ள விசேட தேவையுடைய சிறுவர்கக்காகான போசாக்கு உணவுப்பொதி

வடக்கு மாகாணத்திலுள்ள நலிவுள்ள குடும்பத்தில் போசாக்கு குறைபாடுள்ள விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான போசாக்கு உலர் உணவுப்பொதி வழங்குதல் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செலகத்திற்குட்பட்ட போசாக்கு குறைபாடுள்ள 10 மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கு மாதாந்தம் ரூபா 10,000.00 போசாக்கினை மேம்படுத்தக்கூடிய உலர் உணவுப்பொதி முதலாம் கட்டம் இன்று சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக வழங்கப்பட்டது. அவர்களுக்கான பொதி பிரதேச செயலாளர் மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர், கூட்டுறவு உத்தியோகத்தர்கள் மூலம் பொருட்கள் 10.06.2026 வழங்கப்பட்டன.





# சலவைத்திரவம், வாசனைத்திரவியம் செய்வது தொடர்பான செயல்முறைப்பயிச்சி

10.06.2026 அன்று கைதடி பிரதேசத்தில் உள்ள ஆர்வமான தொழில் முயற்சியாளர்களுக்கு கைதடி நவபுரம் பொது மண்டபத்தில் எமது பிரதேச செயலக விதாத பிரிவினரால் சலவைத்திரவம் மற்றும் Perfume செய்வது தொடர்பான செயல்முறைப் பயிற்சி ஒன்று நடாத்தப்பட்டது. இதில் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் 20க்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்கள் பங்கு பற்றி இருந்தனர்





- World Vision நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலை கல்வி கற்கும் 23 மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கு பாடசாலை பைகள் (School Bag) பிரதேச செயலாளர் அவர்களால் 11.06.2026 அன்று வழங்கப்பட்டது.





- ”போதை பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்” எனும் தொனிப்பொருளில் தென்மராட்சி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் வருடம் தோறும் நடாத்திவரும் புகைத்தல் எதிர்ப்பு கொடிதின சேமிப்பு விழிப்புணர்வு நிகழ்வானது கொடிகாமம் வங்கியின் ஏற்பாட்டில் 11.06.2026 காலை 7.30 மணிக்கு யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, கச்சாய் G.T.M.S மிருசுவில் R.C, மிருசுவில் G.T.M.S, அல்லாரை G.T.M.S பாடசாலைகளில் மாணவர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், வங்கி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், போதை தடுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், CBO தலைவர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





- சனாதிபதி நிதியத்தின் பிரதேச செயலகம் வரை பன்முகப்படுத்துதல் திட்டத்தின் மூலம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பன்னிரண்டாவது மருத்துவ கொடுப்பனவாக இருதய சத்திர சிகிச்சைக்கான ரூபா 300,000/- பெறுமதியான காசோலை தனங்கிளப்பு கிராம அலுவலர் பிரிவைக் சேர்ந்த திரு.செல்லத்துரை கந்தசாமி அவர்களுக்கு 11.06.2026ம் திகதி பிரதேச செயலாளர் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.



- "போதை பழக்கத்தை தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்" எனும் தொனிப்பொருளில் தென்மராட்சி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் வருடம் தோறும் நடாத்திவரும் புகைத்தல் எதிர்ப்பு கொடிதின சேமிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் வீதி நாடக நிகழ்வானது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் F.C சத்தியசோதி அவர்களின் பங்குபற்றுதலுடன் கைதடி வங்கியின் ஏற்பாட்டில் 11.06.2026 மாலை 1.30மணிக்கு யா/கைதடி நாவற்குழி மகாவித்தியாலய பாடசாலையிலிருந்து நாவற்குழி புகையிரத நிலையம் வரை நடைபவனியாக இடம்பெற்றது. பின்பு புகையிரத நிலையத்தில் வீதி நாடக நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், வங்கி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், போதை தடுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள், CBO அங்கத்தவர்கள், மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





- தென்மராட்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட திருமணத்திற்கு தயாராகவுள்ள மற்றும் திருமணம் செய்து குறுகிய காலங்களேயான தம்பதியினர்களுக்கான உளவளத்துணை பயிற்சிப்பட்டறை 12.06.2026 வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் F.C சத்தியசோதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வு Future Leaders Foungation நிறுவனத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவின் ஒழுங்கமைப்புடனும் இடம்பெற்றது. இந்நிகழ்வின் வளவாளராக Future Leaders Foundation நிறுவன உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 15 தம்பதியினர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.






- பிரதேச மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக்கூட்டம் பிரதேச செயலாளர் தலைமையில் 12.06.2026 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாவட்டக் காணிப்பயன்பாட்டு திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், உதவிப்பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கைதடி சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள், J/294, J/289, J/290, J/291, J/293 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், சமூக வலுவூட்டல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பிரதேச செயலக காணிக்கிளை உத்தியோகத்தர்களும் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.





- சனாதிபதி நிதியத்தின் பிரதேச செயலகம் வரை பன்முகப்படுத்துதல் திட்டத்தின் மூலம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பதின்மூன்றாவது மருத்துவ கொடுப்பனவாக இடது தொடை எலும்பு முறிவு சத்திர சிகிச்சைக்கான ரூபா 150,000/- பெறுமதியான காசோலை அல்லாரை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திரு. நல்லையா சந்திரபாலன் அவர்களுக்கு 16.06.2026ம் திகதி பிரதேச செயலக கணக்காளர் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.



- தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான பயிற்சி நெறியானது 16.06.2026 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி பிரதேச செயலாளர் திருமதி.லாகினி நிருபராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் வளவாளராக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபர் திரு.க.சிவகரன் அவர்கள் கலந்து கொண்டார். இப்பயிற்சி நெறியில் கிராம அலுவலர்கள், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.





- இரண்டாம் காலாண்டுக்குரிய பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக்குழுக் கூட்டமானது 18.06.2026 (வியாழக்கிழமை) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் F.C சத்தியசோதி அவர்கள் தலைமையில் பி.ப 2.30 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், பொலிஸ் பொறுப்பதிகாரி (சாவகச்சேரி), சுகாதார மணிமனை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் (கொடிகாமம்), மதுவரி உத்தியோகத்தர், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.





- ரூபாய் இரண்டு மில்லியன் பெறுமதியான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் கட்டம் IV இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக் கருத்தரங்கு தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் 18.06.2026 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்றது. இவ்வீடமைப்புத் திட்டத்தின் 4ம் கட்டத்தின் (Stage IV) கீழ் தென்மராட்சிப் பிரிவில் மொத்தம் 16 குடும்பங்கள் வீடுகளை அமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான முதற்கட்ட நிதியுதவிக் காசோலைகள் கடந்த செவ்வாய்கிழமை (16.06.2026) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் வைத்து வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் கௌரவ பிரதி அமைச்சர் ரி.பி.சரத் (T.B Sarath) அவர்களால் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன. இதன் போது பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா 400,000.00 ரூபா பெறுமதியான முதற்கட்டக் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாவட்டச் செயலகத்தில் காசோலைகளைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளை தத்தமது வீடுகளைத் தரமாகவும், திட்டமிட்ட காலப்பகுதிக்குள்ளும் அமைப்பதற்கு தயார்படுத்தும் நோக்கோடு இவ் ஆலோசனைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கருத்தரங்கில் பிரதேச செயலாளர் F.C சத்தியசோதி, பிரதி திட்டமிடல் பணிப்பாளர், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ க. இளங்குமரன் அவர்களின் இணைப்பாளர் திரு.கா.பிரகாஷ், பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் அழைக்கப்பட்ட சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்கள், விடய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு கட்டுமானப் பணிகளை எவ்வாறு ஆரப்பிப்பது, எத்தகைய தரக்கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவது என்பது குறித்த விரிவான வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் பயனாளிகளுக்கு வழங்கினர்.

இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய நிலையிலுள்ள குடும்பங்களுக்கு பாதுகாப்பான நிரந்தர உறைவிடத்தை உறுதி செய்வது முதன்மை இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் (Sustainable Development Goals) நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது

இலக்கு I (வறுமை ஒழிப்பு) & இலக்கு II (நிலையான நகரங்களும் சமூகங்களும்) விளிம்பு நிலை மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய முறையான வீடுகளை அமைத்துக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத் தரம் உயர்த்தப்பட்டு நிலையானதொரு சமூகம் கட்டியெழுப்பப்படுகிறது.

பங்களிப்பு அணுகுமுறை (Participatory Approach) அரசாங்கத்தின் இந்த மானிய உதவியுடன், பயனாளிகளின் உழைப்பு மற்றும் உள்ளூர் சமூகத்தின் பங்களிப்பும் இணைக்கப்பட்டு, மக்களின் சுயசார்புத் தன்மை இத்திட்டத்தின் மூலம் ஊக்குவிப்பதற்காக தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இந்த 4ம் கட்ட வீடமைப்புத் திட்டமானது வீடற்ற 16 குடும்பங்களின் நீண்ட காலக் கனவை நனவாக்குவதுடன், பிரதேசத்தின் ஒட்டுமொத்த சமூகப்பொருளாதார வளர்ச்சியிலும் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வமைச்சின் இத்திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்திற்கு முதலாம் கட்டத்தில் 29 வீடுகளும், இரண்டாம் கட்டத்தில் 34 வீடுகளும், மூன்றாம் கட்டத்தில் 27 வீடுகளும் கிடைக்கப்பெற்று அதன் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.









- சர்வதேச விளையாட்டு தினத்தை முன்னிட்டு வரணி இயற்றாலை கிராம அலுவலர் பிரிவில் உள்ள ரட்ணா முன்பள்ளியின் பெற்றோர் பிள்ளைகளுக்கான விளையாட்டு நிகழ்வு மற்றும் பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்வு ஆகியன வரணி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 19.06.2026 மு.ப 9.00 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

- தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நான்கு சமுர்த்தி வங்கிகளிற்குட்பட்ட கிராம பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர் யுவதிகளிற்கான தொழில் முறை பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு மதிப்பிற்குரிய உதவி பிரதேச செயலாளரின் பங்குபற்றுதலுடன் 23.06.2026 செவ்வாய்க்கிழமை மற்றும் 27.06.2026 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், கருத்திட்ட முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வளவாளராக கரவெட்டி தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் இ. அன்ரனி அவர்கள் சிறந்த முறையில் விளக்கமளித்தார்.





- தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமானது தலைமையக முகாமையாளர் தலைமையில் 23.06.2026ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் முகாமைத்துவப் பணிப்பாளர், கருத்திட்ட முகாமையாளர், வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். 2026ம் ஆண்டிற்கான கெக்குலு சிறுவர் கழக

போட்டி, போதை ஒழிப்பு சேமிப்பு வேலைத்திட்டம் மற்றும் குடும்ப வலுப்படுத்தல் வேலைத்திட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக பிரிவு ரீதியாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.





- தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களை அடையாளம் காணும் வேலைத்திட்டம் 24.06.2026 புதன்கிழமை கைதடி நுணாவில் J/309, கெற்பேலி J/332 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நடைபெற்றது. இக்களப்பணி வேலைத்திட்டத்தில் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுடன் இணைந்து கைதடி நுணாவில் J/309 கிராம அலுவலர் பிரிவில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களும் கெற்பேலி J/332 கிராம அலுவலர் பிரிவில் கொடிகாமம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களும் ஈடுபட்டிருந்தனர்.





- மக்கள் பங்குபற்றுதலுடன் கிராம மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டம் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் தலைமையில் கைதடி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் நவபுரம் சனசமூக நிலையத்தில் 24.06.2026ம் திகதி புதன்கிழமை மு.ப.9.00 மணிக்கு நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் பல திணைக்களங்கள் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.








- தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கான டிஜிட்டல் மார்க்கெட்டிங் தொடர்பான ஆலோசனையும் வழிகாட்டலும் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு கடந்த 24.06.2026 மற்றும் 25.06.2026ம் திகதிகளில் தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.





- கோவை முகாமைத்துவத்தினூடாக உற்பத்தித் திறனை மேம்படுத்தல் பயிற்சி நெறியானது 26.06.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.00 தொடக்கம் ந.ப 12.00 மணி வரை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி பிரதேச செயலாளர் திருமதி லாகினி நிரூபராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் வளவாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் இராசையா தனுசன் அவர்கள் கலந்து கொண்டதுடன் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





- சனாதிபதி நிதியத்தின் பிரதேச செயலகம் வரை பன்முகப்படுத்துதல் திட்டத்தின் மூலம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பதினான்காவது மருத்துவக் கொடுப்பனவாக இருதய சத்திர சிகிச்சைக்காக ரூபா 300,000/- பெறுமதியான காசோலை நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திரு.நடேசு ஜீவனராஜா அவர்களுக்கு 30.06.2026ம் திகதி பிரதேச செயலக கணக்காளர் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது




## காணி அளவீடுகள்


| | | |
|---|---|---|
| 1 ஹெக்டேயர் | - | 10000 சதுர மீற்றர் |
| 1 ஹெக்டேயர் | - | 2.47 ஏக்கர் (அண்ணளவாக) |
| 1 ஏக்கர் | - | 0.4048 ஹெக்டேயர் |
| 1/2 ஏக்கர் | - | 0.2024 ஹெக்டேயர் |
| 1/4 ஏக்கர் | - | 0.1012 ஹெக்டேயர் |
| 20 பேர்ச் | - | 0.0506 ஹெக்டேயர் |
| 10 பேர்ச் | - | 0.0253 ஹெக்டேயர் |
| 1 பேர்ச் | - | 0.0025 ஹெக்டேயர் |
| 1 சதுர கிலோமீற்றர் | - | 100 ஹெக்டேயர் |
| 40 பேர்ச் | - | 1 றூட் |
| 4 றூட் | - | 1 ஏக்கர் |
| 1 சதுர மைல் | - | 640 ஏக்கர் |
| 1 ஏக்கர் | - | 10 சங்கிலி = 100,000 சதுர சங்கிலி |
| 1 பேர்ச் | - | 625 சதுர சங்கிலி |
| 4840 சதுர யார் | - | 1 ஏக்கர் = 160 பேர்ச் |
| 272 சதுர அடி | - | 1 பேர்ச் = 0.10 Lacham |
| 160 பேர்ச் | - | 43560 Square Feet |
| 1 Lacham | - | 10 பேர்ச் |
| 1 ஏக்கர் | - | 160 பேர்ச் = 43560 Square Feet |
| 1 ஏக்கர் | - | 24 Lacham(Paddy Land) =288 Kulis = 16 Lacham (High Land) |
| 160 பேர்ச் | - | 288 Kulis = 1 ஏக்கர் |
| 1 பேர்ச் | - | 1.8 Kulis (Paddy and High Land) |
| 24 Lacham (Paddy Land) | = | 1 ஏக்கர் |
| 1 Lacham = 0.0042 ஏக்கர் | = | 0.0168 ஹெக்டேயர் |
| 16 Lacham (High Land) | = | 1 ஏக்கர் |
| 1 Lacham = 0.0625 ஏக்கர் | = | 0.0253 ஹெக்டேயர் |

## தென்மராட்சி பிரதேசத்தின் அமைவிடம் மற்றும் பரப்பளவு, சனத்தொகை தொடர்பான விபரங்கள்

தென்மராட்சிப் பிரதேசமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள முக்கியமான நிர்வாகப் பிரிவாகும். அதாவது இப் பிரிவானது 236.056 சதுர கிலோமீற்றர் பரப்பளவினையும் 60 கிராம அலுவலர் பிரிவுகளையும் 132 கிராமங்களையும் நகரசபை, மற்றும் பிரதேச சபை என இரண்டு உள்ளூராட்சி அலகுகளையும் உள்ளடக்கியுள்ளதுடன் வடக்கு எல்லையாக தொண்டமானாறு கடனீரேரியும், கிழக்கு எல்லையாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவும், தெற்கு எல்லையாக யாழ்ப்பாண கடனீரேரியும், மற்றும் கேரதீவு, கச்சாய் முதல் சாளம்பை வரையான பகுதியும், மேற்கு எல்லையாக நாவற்குழி செம்மணிப் பாலம், உப்பாறு கடனீரேரி அத்துடன் கோப்பாய் கைதடிப் பாலம் வரையான பகுதியையும் கொண்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 3m உயரத்தில் அமைந்துள்ளது. தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவானது 60 கிராம அலுவலர் பிரிவுகளையும் 132 கிராமங்களையும் கொண்டுள்ளதுடன் நகரசபை, பிரதேச சபை என இரண்டு உள்ளூராட்சி அலகுகளையும் கொண்டுள்ளது. இப்பிரதேச செயலாளர் பிரிவின் மொத்த சனத்தொகை 30.09.2026 இல் 72,114 ஆகக் காணப்படுகின்றது. (திட்டமிடல் கிளை, பிரதேச செயலகம்).




Map 2 :Land Use Patterns


ADMINISTRATIVE MAP - DIVISIONAL SECRETARIAT,THENMARADCHI
JAFFNA DISTRICT
1 cm = 15 km
AA
AB
B
C
Railway Line
VADAMARADCHI
VADAMARADCHI SOUTH-WEST(KARAVEDDY)
VALIKAMAM EAST(KOPAY)
VALIKAMAM SOUTH(UDUVIL)
NALLUR
JAFFNA
Coordinate System: SLD-Kandawala
Projection: Transverse Mercator
Datum: Everest 1830 SriLanka
Units: Meter
Source - Survey Department
Prepared by:- District Land use Planning Unit,Jaffna
1 cm = 1 km
Date: 4/17/2026

## தென்மராட்சி பிரதேச பிரிவின் கிராம அலுவலர் பிரிவு ரீதியான பரப்பளவும் அரச காணி விபரமும்

| தொ.இல | கிராம அலுவலர் இல | கிராம அலுவலர் பிரிவு | Area (sqkm) | அரச காணி A | R | P |
|---|---|---|---|---|---|---|
| 1 | J/288 | கைதடி வடக்கு | 3.67 | 18 | 3 | 32.5 |
| 2 | J/289 | கைதடி கிழக்கு | 7.52 | 68 | 0 | 3 |
| 3 | J/290 | கைதடி மத்தி | 0.50 | 26 | 3 | 31 |
| 4 | J/291 | கைதடி தெற்கு | 2.89 | 39 | 3 | 18 |
| 5 | J/292 | கைதடி தென்கிழக்கு | 1.16 | 9 | 0 | 31 |
| 6 | J/293 | கைதடி மேற்கு | 4.67 | 37 | 3 | 38 |
| 7 | J/294 | நாவற்குழி மேற்கு | 5.66 | 65 | 3 | 24 |
| 8 | J/295 | நாவற்குழி கிழக்கு | 3.33 | 3 | 2 | 13.64 |
| 9 | J/296 | கோயிலாக்கண்டி | 2.45 | 0 | 0 | 0 |
| 10 | J/297 | கைதடி நாவற்குழி | 1.84 | 0 | 0 | 0 |
| 11 | J/298 | மறவன்புலோ | 7.55 | 3 | 0 | 12.35 |
| 12 | J/299 | தனங்கிளப்பு | 16.47 | 230 | 0 | 0 |
| 13 | J/300 | சாவகச்சேரி நகரம் | 1.66 | 0 | 0 | 0 |
| 14 | J/301 | கோயிற்குடியிருப்பு | 1.85 | 4 | 3 | 4.86 |
| 15 | J/302 | சங்கத்தானை | 1.15 | 0 | 0 | 0 |
| 16 | J/303 | சாவகச்சேரி வடக்கு | 0.80 | 2 | 1 | 6.27 |
| 17 | J/304 | மண்டுவில் | 1.75 | 0 | 0 | 0 |
| 18 | J/305 | கல்வயல் | 3.68 | 0 | 0 | 0 |
| 19 | J/306 | நுணாவில் கிழக்கு | 1.67 | 20 | 0 | 0 |
| 20 | J/307 | நுணாவில் மத்தி | 1.94 | 0 | 0 | 0 |
| 21 | J/308 | நுணாவில் மேற்கு | 3.57 | 14 | 3 | 25 |
| 22 | J/309 | கைதடி நுணாவில் | 4.30 | 2.5 | 0 | 0 |
| 23 | J/310 | தென்மட்டுவில் | 1.23 | 0 | 0 | 0 |
| 24 | J/311 | மட்டுவில் நுணாவில் | 0.75 | 0 | 0 | 0 |
| 25 | J/312 | மட்டுவில் மத்தி | 2.50 | 6 | 1 | 26 |
| 26 | J/313 | மட்டுவில் வடக்கு | 4.60 | 30 | 0 | 10 |
| 27 | J/314 | மட்டுவில் கிழக்கு | 0.67 | 0 | 0 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28 | J/315 | சந்திரபுரம் | 3.21 | 0 | 0 | 0 |
| 29 | J/316 | சரசாலை தெற்கு | 4.63 | 0 | 0 | 0 |
| 30 | J/317 | சரசாலை வடக்கு | 9.45 | 31 | 0 | 4 |

| தொ.இல | கிராம அலுவலர் இல | கிராம அலுவலர் பிரிவு | Area (sqkm) | அரச காணி A | R | P |
|---|---|---|---|---|---|---|
| 31 | J/318 | மீசாலை கிழக்கு | 1.87 | 0 | 0 | 0 |
| 32 | J/319 | மீசாலை மேற்கு | 1.77 | 0 | 2 | 4.76 |
| 33 | J/320 | இராமாவில் | 2.66 | 2 | 1 | 21.17 |
| 34 | J/321 | மீசாலை வடக்கு | 3.92 | 70 | 0 | 10 |
| 35 | J/322 | அல்லாரை | 4.16 | 0 | 0 | 0 |
| 36 | J/323 | வெள்ளாம்போக்கட்டி | 1.65 | 1 | 0 | 10 |
| 37 | J/324 | கச்சாய் | 3.68 | 2 | 0 | 22.63 |
| 38 | J/325 | பாலாவி | 3.83 | 0 | 0 | 0 |
| 39 | J/326 | கொடிகாமம் வடக்கு | 4.45 | 1 | 3 | 9.92 |
| 40 | J/327 | கொடிகாமம் மத்தி | 2.61 | 3 | 1 | 5.17 |
| 41 | J/328 | கொடிகாமம் தெற்கு | 2.86 | 0 | 0 | 0 |
| 42 | J/329 | உசன் | 3.13 | 75 | 0 | 0 |
| 43 | J/330 | கரம்பகம் | 6.41 | 20 | 0 | 0 |
| 44 | J/331 | விடத்தற்பளை | 4.58 | 0 | 3 | 38.66 |
| 45 | J/332 | கெற்பேலி | 10.20 | 63 | 0 | 36 |
| 46 | J/333 | எழுதுமட்டுவாழ் தெற்கு | 7.29 | 28 | 0 | 0 |
| 47 | J/334 | எழுதுமட்டுவாழ் வடக்கு | 10.79 | 162 | 0 | 32 |
| 48 | J/335 | மிருசுவில் வடக்கு | 6.85 | 145 | 0 | 18 |
| 49 | J/336 | மிருசுவில் தெற்கு | 3.46 | 0 | 0 | 0 |
| 50 | J/337 | குடமியன் | 4.04 | 0 | 1 | 5.55 |
| 51 | J/338 | நாவற்காடு | 5.57 | 0 | 1 | 6 |
| 52 | J/339 | வரணி வடக்கு | 5.13 | 19 | 0 | 27 |
| 53 | J/340 | மாசேரி | 3.25 | 0 | 0 | 0 |
| 54 | J/341 | இடைக்குறிச்சி | 4.40 | 1 | 3 | 34.26 |
| 55 | J/342 | கரம்பைக்குறிச்சி | 3.35 | 10 | 2 | 13.21 |
| 56 | J/343 | வரணி இயற்றாலை | 4.12 | 0 | 3 | 3.59 |
| 57 | J/344 | தாவளை இயற்றாலை | 6.15 | 60 | 0 | 21 |
| 58 | J/345 | மந்துவில் கிழக்கு | 1.46 | 31 | 0 | 31 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 59 | J/346 | மந்துவில் மேற்கு | 1.48 | 16 | 0 | 31 |
| 60 | J/347 | மந்துவில் வடக்கு | 3.78 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | | | **128.90** | **709** | **20** | **380.92** |

## காணி உபயோகக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகள்.

**காணி உபயோகக் கொள்கை திட்டமிடல் திணைக்களம்** (Land Use Policy Planning Department)

**நாட்டின் காணி வளங்களை முறையாகவும், நிலையான முறையிலும் பயன்படுத்துவதற்கான திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்கின்றது.**

**முக்கிய செயற்பாடுகள் :**

1. **காணிப் பயன்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.**
   - தேசிய, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டங்களில் காணிப் பயன்பாட்டுத்திட்டங்களைத் தயாரித்தல்
   - காணியின் பொருத்தமான பயன்பாட்டை அடையாளம் காணுதல்
2. **கிராம மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல்**
   - கிராமங்களின் காணிப் பயன்பாட்டுப் பிரச்சினைகளை அடையாளம் காணுதல்
   - தற்போதைய காணிப்பயன்பாட்டை ஆய்வு செய்தல்.
   - ஏதிர்கால காணிப்பயன்பாட்டிற்கான திட்டங்களைத் தயாரித்தல்.
3. **காணிப் பயன்பாட்டு மாற்றங்களைக் கண்காணித்தல்.**
   - காணிப் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றங்களைப் பதிவு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
4. **சுற்றுச்சூழல் உணர்திறன் கொண்ட பகுதிகளை அடையாளம் காணுதல்.**
   - வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, கடலரிப்பு, உவர்நீர் ஊடுருவல் போன்ற அபாயப் பகுதிகளை அடையாளம் காணுதல்.
   - Environment Sensitive Areas தொடர்பான காணி பயன்பாட்டுப் பிரச்சினைகளை ஆய்வு செய்தல்.
5. **காணி வளங்களை மதிப்பீடு செய்தல்**
   - மண் வகை, மண் ஆழம், சரிவு, நீர் வளம், காலநிலை போன்ற காரணிகளை ஆய்வு செய்தல்.
   - விவசாயம் மற்றும் பிற பயன்பாடுகளுக்கான காணிப் பொருத்தத்தைக் கணிப்பிடுதல்.
6. **நீர் வளங்களை வரைபடமாக்குதல்.**
   - குளங்கள், கால்வாய்கள், ஆறுகள்,நீர்த்தேக்கங்கள் மற்றும் பிற நீர்மூலங்களை அடையாளம் கண்டு வரைபடமாக்குதல்.
7. **மண்டலப்படுத்தல். (Zoning)**

- விவசாய மண்டலம், குடியிருப்பு மண்டலம், பாதுகாப்பு மண்டலம் போன்ற காணிப்பயன்பாட்டு மண்டலங்களைத் திட்டமிடல்.
- ஒவ்வொரு பகுதியின் பொருத்தமான பயன்பாட்டைத் தீர்மானிக்க உதவுதல்.

8. **காணிப் பயன்பாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்.**
   - காணி முரண்பாடுகள், முறையற்ற காணிப்பயன்பாடுகள், நீர்ப்பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை அடையாளம் காணுதல்.
   - சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து தீர்வுகளை முன்வைத்தல்.
9. **அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு**
   - மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், விவசாயம், நீர்ப்பாசனம், சுற்றுச்சூழல் போன்ற துறைகளுடன் இணைந்து செயல்படுதல்.
10. **தரவுகள் மற்றும் வரைபடங்களைத் தயாரித்தல்.**
    - காணி பயன்பாடு தொடர்பான புள்ளி விபரங்கள், வரைபடங்கள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்.
    - GIS மற்றும் பிற புவியியல் தகவல் முறைகளைப் பயன்படுத்தி காணி தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
11. **மக்கள் பங்கேற்பை ஊக்குவித்தல்.**
    - கிராம மக்களின் காணி பயன்பாட்டுத் தேவைகள் மற்றும் கருத்துக்களைப் பெறுதல்.
    - மக்கள் பங்கேற்புடன் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல்.
12. **காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.**
    - தயாரிக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.
    - தேவைக்கேற்ப திட்டங்களைப் புதுப்பித்தல்.
13. **பிரதேச மற்றும் மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டம் நடாத்துதல்**.
    - அரச காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும், பராதீனப்படுத்துவதற்கும், நீண்டகாலக்குத்தகையில் வழங்குவதற்கும் சிபாரிசு வழங்குதல்

## சுருக்கமாக:

**"காணி வளங்களை அவற்றின் இயற்கைத் தன்மை, பொருத்தம், சமூக தேவை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, எதிர்கால சந்ததியினருக்கும் பயனளிக்கும் வகையில் முறையாகப் பயன்படுத்துவதற்கான திட்டமிடலே காணி உபயோகக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும்"**

ஆக்கம்: இ.ஜசிந்தா - கா.ப.தி.உ
பிரதேச செயலகம், தென்மராட்சி

# தேசவழமைச் சட்டம் (Thesawalamai Law)

தேசவழமைச் சட்டம் என்பது இலங்கையின் வடமாகாணத் தமிழர்களுக்குப் பொருந்தும் ஒரு தனிப்பட்ட வழக்காற்றுச் சட்டமாகும். குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களின் திருமணம், சொத்துரிமை, சீதனம், முதுசம், தேடியதேட்டம் மற்றும் வாரிசுரிமை போன்ற விடயங்களை இது ஒழுங்குபடுத்துகிறது.

**தேசவழமைச் சட்டத்தின் கீழ் சொத்து வகைகள்**

1. முதுசம் (Muthusam) மூதாதையர்களிடமிருந்து பரம்பரையாகப் பெறப்பட்ட சொத்து.
2. சீதனம் (Cheethanam): பெற்றோரால் மகளுக்கு வழங்கப்படும் சொத்து.
3. தேடியதேட்டம் (Thediathettam): கணவன் மனைவி திருமண வாழ்க்கையில் சம்பாதித்துச் சேர்த்த சொத்து.

**முக்கியமான சட்டங்கள்**

- 1806 – Tesawalamai Regulation.
- 1911 – Jaffna Matrimonial Rights and Inheritance Ordinance.
- 1947 – திருத்தச் சட்டம் இலக்கம் 58.
- 1947 – Thesawalamai Pre-emption Ordinance.

**சட்ட ஆதாரங்கள்:**

- Jaffna Matrimonial Rights and Inheritance Ordinance
- Tesawalamai Regulation
- இலங்கை உயர் நீதிமன்றத் தீர்ப்பு – சொத்து வகைப்பாடு

**யாருக்கு தேசவழமைச் சட்டம் பொருந்தும்?**

தேச வழமைச் சட்டம் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கான தனியார் சட்டமாகும். யாழ்ப்பாணத்தை விட்டு இலங்கையின் வேறு பகுதிகளில் வசிப்பவர்களுக்கும், அவர்களின் சட்ட நிலை மற்றும் யாழ்ப்பாணத்துடனான தொடர்பைப் பொறுத்து இது பொருந்தலாம்.

**முக்கியமான சட்டப் பிரிவுகள்**

| சட்டம் | முக்கிய விடயம் |
|---|---|
| Regulation No. 18 of 1806 | தேசவழமைச் சட்டத்திற்கு சட்ட அங்கீகாரம் |
| Ordinance No. 1 of 1911 | திருமண உரிமைகள் மற்றும் வாரிசுரிமை |
| Ordinance No. 58 of 1947 | 1911 சட்டத்தின் திருத்தம் |
| Pre-emption Ordinance No. 59 of 1947 | காணி விற்பனையில் முன்கொள்வனவு உரிமை |

1. முதுசம் (Muthusam) - யாழ்ப்பாண தேச வழமைச் சட்டம்

முதுசம் என்பது பெற்றோர் அல்லது மூதாதையர்களிடமிருந்து ஒருவர் அவர்களின் மரணத்தின்போது பரம்பரை வழியாகப் பெறும் சொத்தாகும்.

யாழ்ப்பாண தேசவழமைச் சட்டத்தின் 1911ஆம் ஆண்டு Jaffna Matrimonial Rights and Inheritance Ordinance இன் 15ஆம் பிரிவு முதுசத்தை வரையறுக்கிறது.

➢ **முதுசத்தின் வகைகள்**

- தந்தை வழி முதுசம்: தந்தை அல்லது தந்தை வழி மூதாதையர்களிடமிருந்து பெறும் சொத்து.
- தாய் வழி முதுசம்: தாய் அல்லது தாய் வழி மூதாதையர்களிடமிருந்து பெறும் சொத்து.

➢ **முதுசத்தில் மகன், மகளின் உரிமை**

சட்டத்தின் 17, 18ஆம் பிரிவுகள் தந்தை வழிச் சொத்து, தாய் வழிச் சொத்து ஆகியவற்றை வேறுபடுத்துகின்றன.

22ஆம் பிரிவின்படி, இறந்தவரின் பிள்ளைகள் அனைவரும் சமமான வாரிசுரிமை பெறுவர். முன்பே இறந்த பிள்ளையின் சந்ததியினர் அவருக்குரிய பங்கைப் பரம்பரையாகப் பெறுவர்.

**ஒரு உதாரணம்**

தந்தைக்கு 30 பரப்பு முதுசக் காணி இருக்கிறது. அவருக்கு:

- ஒரு மகன்
- இரண்டு மகள்கள்

இருக்கிறார்கள் என வைத்துக்கொள்வோம்.

தந்தை உயில் எழுதாமல் இறந்தால், பொதுவான வாரிசுரிமை விதியின்படி:

| வாரிசு | பங்கு |
|---|---|
| மகன் | 10 பரப்பு |
| முதல் மகள் | 10 பரப்பு |
| இரண்டாவது மகள் | 10 பரப்பு |

இது வேறு சட்ட உரிமைகள் அல்லது உயிருடன் இருக்கும் துணையின் உரிமைகள் பாதிக்காத எளிய உதாரணம்.

➢ **முக்கியமான சட்டப் பிரிவுகள்**

| சட்ட பிரிவு | விடயம் |
|---|---|
| 15 | முதுசம் |
| 16 | உறுமை |
| 17 | தந்தை வழிச் சொத்து |
| 18 | தாய் வழிச் சொத்து |
| 21 | வாரிசுரிமையின் வரிசை |
| 22 | பிள்ளைகளின் வாரிசுரிமை |
| 23 | பிள்ளைகள் இல்லாதபோது தந்தையின் உரிமை |
| 24 | பிள்ளைகள் இல்லாதபோது தாயின் உரிமை |

## 2. சீதனம் (Cheethanam) – யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம்

சீதனம் என்பது பெற்றோர் தமது மகளுக்கு திருமணத்திற்கு முன்னர் அல்லது திருமணத்தின் போது வழங்கும் சொத்தாகும். இதில் காணி, வீடு, நகை, பணம் போன்றவை அடங்கலாம்.

### ➢ சீதனச் சொத்தின் சட்ட உரிமை

1911ஆம் ஆண்டு Jaffna Matrimonial Rights and Inheritance Ordinance இன் 6ஆம் பிரிவின்படி:

- திருமணத்திற்கு முன்பு பெண்ணுக்குச் சொந்தமாக இருந்த சொத்து அவளுடைய தனிச் சொத்து.
- திருமணத்தின் போது பரிசாக அல்லது வாரிசுரிமையாகப் பெறும் சொத்தும் அவளுடைய தனிச் சொத்தாகும்.
- கணவனின் கடன்களுக்காக மனைவியின் தனிச் சொத்து பொதுவாகப் பொறுப்பாகாது. சட்டத்தில் குறிப்பிட்ட விதிவிலக்குகள் உள்ளன.

### ➢ சீதனக் காணியில் யாருக்கு உரிமை?

உதாரணமாக, ஒரு தந்தை தனது மகளுக்குத் திருமணத்தின்போது 10 பரப்பு காணியைச் சீதனமாக வழங்குகிறார் என வைத்துக்கொள்வோம்.

- அந்தக் காணி மகளின் தனிச் சொத்தாகும்.
- கணவன் திருமணம் செய்ததனால் மட்டும் உரிமையாளர் ஆகமாட்டார்.
- மகள் இறந்தால் அந்தச் சொத்தின் வாரிசுரிமை தொடர்பான சட்ட விதிகள் பொருந்தும்.

### ➢ தாய் இறந்தால் சீதனச் சொத்து யாருக்குச் செல்லும்?

இது மிகவும் முக்கியமான சட்ட விடயம்.
Nagaretnam v. Alagaretnam (1911) வழக்கில், தாயின் சீதனச் சொத்து தொடர்பாக மகள்களுக்கு மகன்களை விட முன்னுரிமை வழங்கப்பட்ட சூழ்நிலை நீதிமன்றத்தில் ஆராயப்பட்டது.

### ➢ தொடர்புடைய சட்டங்கள்

- Jaffna Matrimonial Rights and Inheritance Ordinance – 1911 மற்றும் 1947 திருத்தம்
- Tesawalamai Law – பாரம்பரிய சட்ட விதிகள்
- Nagaretnam v. Alagaretnam – நீதிமன்றத் தீர்ப்பு

## 3. தேடியதேட்டம் (Thediathetam) – யாழ்ப்பாண தேச வழமைச் சட்டம்

**தேடியதேட்டம்** என்பது கணவன் மனைவி திருமண வாழ்க்கை நீடிக்கும் காலத்தில் சம்பாதித்து அல்லது பணம் கொடுத்து வாங்கிய சொத்தைக் குறிக்கும்.

இது யாழ்ப்பாண தேச வழமைச் சட்டத்தில் முக்கியமான சொத்து வகையாகும்.

### ➢ Øஎந்தச் சொத்துக்கள் தேடிய தேட்டமாகும்?

1911ஆம் ஆண்டு Jaffna Matrimonial Rights and Inheritance Ordinance இன் 19ஆம் பிரிவு, 1947ஆம் ஆண்டு திருத்தத்துடன், தேடிய தேட்டத்தை வரையறுக்கிறது.

- திருமண காலத்தில் பெறுமதியான பணம் கொடுத்து வாங்கிய சொத்து' அந்தப் பணம் தனிப்பட்ட சொத்திலிருந்து வந்திருக்கக் கூடாது.

- திருமண காலத்தில் கணவன் அல்லது மனைவியின் தனிப்பட்ட சொத்திலிருந்து கிடைக்கும் இலாபம்.

➢ **தேடிய தேட்டத்தில் கணவன் மனைவியின் உரிமை**

பொதுவாக இருவருக்கும் சம உரிமை உண்டு.

உதாரணமாக:

கணவனும் மனைவியும் திருமண வாழ்க்கையில் சம்பாதித்து 10 இலட்சம் ரூபாய்க்குக் காணி வாங்கினால்:

| உரிமையாளர் | பங்கு |
|---|---|
| கணவன் | 50% |
| மனைவி | 50% |

இது தேடியதேட்டமாக வகைப்படுத்தப்படும் சொத்து என்ற நிபந்தனைக்கு உட்பட்டது.

➢ **கணவன் அல்லது மனைவி இறந்தால் என்ன நடக்கும்?**

1947ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் 20ஆம் பிரிவின்படி, இறந்தவரின் தேடியதேட்டப் பங்கில் பாதி உயிருடன் இருக்கும் கணவன் அல்லது மனைவிக்குச் செல்கிறது. மீதிப் பாதி இறந்தவரின் வாரிசுகளுக்குச் செல்கிறது. உயில் மற்றும் பிற சட்ட விதிகளும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

➢ **ஒரு நடைமுறை உதாரணம்**

கணவன் மனைவி சேர்ந்து 20 பரப்பு காணி வாங்கியிருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

கணவன் இறந்துவிட்டால்:

- மனைவியின் சொந்தப் பங்கு – 10 பரப்பு.
- கணவனின் 10 பரப்பில் பாதி – 5 பரப்பு மனைவிக்கு.
- மீதமுள்ள 5 பரப்பு – கணவனின் வாரிசுகளுக்கு.

இதன்படி மனைவிக்கு மொத்தம் 15 பரப்பு கிடைக்கும்.

➢ **முக்கியமான சட்டத் தீர்ப்பு**

Manikkavasagar v. Kandasamy (1986) 2 Sri LR 12
இந்த வழக்கில் தேடியதேட்டத்தின் தன்மை, கணவன் மனைவியின் சம உரிமை மற்றும் சொத்துப் பங்கீடு தொடர்பாக நீதிமன்றம் விளக்கியுள்ளது.

ஆக்கம்: இ.ஜசிந்தா - கா.ப.தி.உ
பிரதேச செயலகம், தென்மராட்சி

## தென்மராட்சி பிரதேச செயலக பிரிவின் காணிப்பயன்பாடு

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவின் யாழ்ப்பாண மாவட்டத்தின் முக்கியமான நிர்வாகப் பிரிவுகளில் ஒன்றாகும். இப் பிரதேச செயலக பிரிவின் மொத்தப் பரப்பளவானது 23,605.56 ஹெக்ரேயர் ஆகும். அப் பிரதேசமானது பின்வரும் காணிப்பயன்பாட்டு வகைகளைக் கொண்டுள்ளது.

தென்மராட்சியில் விவசாயம் முக்கியமான காணிப்பயன்பாடாகக் காணப்படுகின்றது. குறிப்பாக நெல் வயல்கள், தோட்டப்பயிர்கள், காய்கறிகள் மற்றும் தென்னை போன்றன கிராம மக்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. இவை வட மாகாணத்தின் விவசாயக் கொள்கையையும் இயற்கை மற்றும் மனித வளங்களினை நிலையான முறையில் பயன்படுத்துவதையும் வலியுறுத்துகின்றது. அப்பிரதேசத்தில் 8957.47 ஹெக்ரேயர் பரப்பளவானது விவசாய பயன்பாடுடைய நிலமாகக் காணப்படுகின்றது. அதில் 5363.92 ஹெக்ரேயர் பரப்பளவானது நெற்பயிற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களாகக் காணப்படுகின்றன. அத்துடன் 5553.84 ஹெக்ரேயர் பரப்பளவானது வீட்டுத்தோட்டங்களாகவும் 3403.63 ஹெக்ரேயர் பரப்பளவானது நீண்டகாலப்பயிர்கள் மற்றும் குறுகியகாலப்பயிர்களும் செய்கை பண்ணப்படுகின்றன.

நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் குடியிருப்புக்கள், வீட்டுத்தோட்டங்கள், சிறு வணிக நடவடிக்கைகள் காணப்படுகின்றன. 1418.02 ஹெக்ரேயர் பரப்பளவான இப்பயன்பாட்டில் காணப்படுகின்றது. குடியிருப்பு விரிவாக்கம் விவசாய நிலங்களின் மாற்றுப்பயன்பாட்டை ஏற்படுத்தாத வகையில் திட்டமிடப்படுவது முக்கியமாகும்.


கிணறுகள், குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் முக்கியமானவை. தென்மராட்சிப் பிரதேசத்தில் 2966.47 ஹெக்ரேயர் பரப்பளவானது நீர்நிலைகளாகவே காணப்படுகின்றன. எனவே நீர்நிலைகளைச் சுற்றிய காணிகளை முறையாகப் பாதுகாத்து பயன்படுத்துவது அவசியமாகும். காணி மற்றும் நீர் வளங்களை திறம்படவும் முறையாகவும் பயன்படுத்துவது காணிப்பயன்பாட்டுத் திட்டமிடலின் முக்கிய நோக்கமாகும்.

சதுப்பு நிலங்கள் மற்றும் கண்டல் தாவரங்கள் உள்ளிட்ட ஈரநிலங்கள் 2017.72 ஹெக்ரேயர் பரப்பளவினைக் கொண்டுள்ளது. இவை சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாகும்.

இவற்றினை பின்வருமாறு அட்டவணை காட்டுகின்றது.

| காணிப்பயன்பாட்டு வகை | முக்கிய பயன்பாடு | பரப்பளவு (ஹெக்டேயர்) | சதவீதம் (%) |
|---|---|---|---|
| மேட்டுக்காணி | கட்டடங்கள் அமைந்துள்ள காணிகள் | 1418.02 | 6.00 |
| | விவசாயம் சாராத காணிகள் | 298.43 | 1.20 |
| விவசாயக் காணிகள் | வீட்டுத் தோட்டங்கள் | 5553.84 | 23.50 |
| | நீண்டகாலப்பயிர்கள் மற்றும் பயிர்கள் | 3403.63 | 14.40 |

| | | | |
|---|---|---|---|
| | நெற் பயிர் | 5363.92 | 22.70 |
| | ஏனைய பயிர்கள் | 2379.75 | 10.08 |
| மேய்ச்சல் காணி | புதர் நிலம் | 3.85 | 0.02 |
| | புல்வெளி | 27.76 | 0.10 |
| ஈர நிலம் | கண்டல் தாவரம் | 1186.63 | 5.00 |
| | சதுப்பு நிலம் | 831.10 | 3.51 |
| நீர்நிலைகள் | | 2966.47 | 12.50 |
| ஏனையவை | | 172.16 | 0.99 |
| | | 23605.56 | 100 |




இதன் அடிப்படையில் தென்மராட்சி பிரதேசத்தின் காணிப்பயன்பாடு விவசாயம், குடியிருப்பு, நீர்வளம் மற்றும் ஈரநிலச் சூழல் ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளது. இதனால் தென்மராட்சியின் மொத்த காணிப்பயன்பாட்டில் விவசாயம் மிகப்பெரிய பங்கைக் (70.68%) கொண்டுள்ளது.

### திட்டமிடலுக்கான முக்கிய விடயங்கள்

தென்மராட்சிக்கான காணிப்பயன்பாட்டுத் திட்டத்தில் பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ள முடியும்.

- விவசாய நிலங்களைப் பாதுகாத்தல்.
- குடியிருப்புப் பகுதிகளை முறையாகத் திட்டமிடல்.
- நீர்நிலைகள் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல்.
- தரிசு நிலங்களை உற்பத்தி நிலங்களாக மாற்றுதல்.
- கால்நடை வளர்ப்புக்கான பொருத்தமான பகுதிகளை அடையாளப்படுத்தல்.
- வீதி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை திட்டமிடுதல்.
- சுற்றுச்சூழல் உணர்திறன் கொண்ட பகுதிகளைப் பாதுகாத்தல்.
- காணிப்பயன்பாட்டு மாற்றங்களைக் கண்காணித்தல்.
- மண், நீர் மற்றும் காணிப்பயன்பாட்டை உறுதி செய்தல்.
- GIS மற்றும் காணிப்பயன்பாட்டு வரைபடங்களைப் பயன்படுத்தி கிராம மட்டத் திட்டங்களைத் தயாரித்தல்.

- 2025ம் ஆண்டின் காணிப்பயன்பாட்டு தரவுகளின்படி தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவின் மொத்த நிலப்பரப்பு 23,605.56 ஹெக்ரேயர் ஆகும். இப்பிரதேசத்தில் விவசாயக் காணிகள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. நெல்வயல்கள், வீட்டுத் தோட்டங்கள் மற்றும் நீண்ட காலப்பயிர்கள் குறிப்பிடத்தக்க வகையில் காணப்படுகின்றன. மேலும் 2966.48 ஹெக்ரேயர் பரப்பளவு நீர்நிலைகளாகவும் 2017.72 ஹெக்ரேயர் ஈரநிலங்களாகவும் காணப்படுகின்றன. எனவே தென்மராட்சியின் காணிப்பயன்பாடு விவசாயம், குடியிருப்பு, நீர்வளம், மற்றும் ஈரநிலச் சூழல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கலப்புக் காணிப்பயன்பாட்டு அமைப்பைக் கொண்டுள்ளது.

ஆக்கம்: இ.ஜசிந்தா - கா.ப.தி.உ
பிரதேச செயலகம், தென்மராட்சி

## அரச காணி தொடர்பாக பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டியவை

- பிரதேச செயலகத்தில் காணியற்றவர் பட்டியலில் தங்களது பெயரை பதிவு செய்து கொள்வதன் மூலம் காணித்துண்டொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- காணிக்கச்சேரி, ஏலம், கேள்வி கோரல் போன்ற முறைகளின் ஊடாக அரச காணியொன்று வழங்கப்படும்.
- சட்டப்படி அரச காணியை விற்பனை செய்ய முடியாது.
- அரச காணிக்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் பிரதேச செயலாளர் ஆவார். அவர் மூலமே ஆவணம் வழங்கப்படல் வேண்டும். அரச காணிக்கு பிரகடன உறுதி எழுத முடியாது.
- அரச காணியொன்றைப் பெறுவதற்கு காணியற்றவராகவும் எதிர்காலத்தில் ஏதாவது ஓர் வழியில் காணி கிடைக்கக் கூடிய சந்தர்ப்பமற்றவராகவும் இருப்பதுடன் விவாகமானவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- காணிக்கச்சேரி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒரு நபர் அவருக்கு வழங்கப்பட்ட அரச காணியை ஆட்சி செய்து அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்படும் அனுமதியே அனுமதிப்பத்திரம் ஆகும்.
- LDO சட்டத்தின் கீழ் ஓர் அளிப்பு (உறுதி) வழங்கப்பட்டதன் பின் அக்காணி அவரது உரிமையாகும்.
- அளிப்பு வழங்கப்பட்ட காணிக்கு பிரதேச செயலாளரின் எழுத்து மூல அனுமதியுடன் மாற்றம் செய்யப்பட்ட நொத்தாரிசு உறுதி காணிப்பதிவுக் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அதன் பிரதி பிரதேச செயலாளருக்கு வழங்கினால் எதிர்கால நடவடிக்கைக்கு உதவியாக இருக்கும்.
- அளிப்புக் காணியை அனுமதிக்கப்பட்ட வங்கிகளில் அடகு வைப்பதற்கு பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
- அனுமதிப்பத்திர காணியை வேறு நபர்களுக்கு மாற்றி வழங்குவதற்காக சட்டத்தில் ஏற்பாடு இல்லை. இருப்பினும் காணிக்கட்டளையின் படி அவசியமான சந்தர்ப்பத்தில் மாத்திரம் மாகாண காணி ஆணையாளரின் அனுமதி பெற்று வேறு நபர்களுக்கு மாற்றி வழங்கலாம்.
- அனுமதிப்பத்திரக்காரர் அல்லது அளிப்புக்காரர் ஒருவர் தனது சீவியத்தின் பின்னர் குறித்த காணி யாருக்கு கிடைக்கவேண்டுமென பெயர் குறித்து நியமித்தல் பின்னுரிமை நியமனமாகும்.
- சட்டத்தின் 3 ம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட உறவினரையும் வாழ்க்கைத் துணைவரையும் (கணவன்/மனைவி) பின்னுரிமையாளராக நியமிக்கலாம்.
- அனுமதிப்பத்திரக்காரர் அல்லது அளிப்புச் சொந்தக்காரர் காலமானால் காணி முதலில் அவரது வாழ்க்கைத் துணைவருக்கு சீவிய உரித்து வழங்கப்படும் அவரது சீவியத்தின் பின்னர் பின் உரித்தாளியைச் சென்றடையும்.

- அனுமதிப்பத்திரக்காரர் அல்லது அளிப்புச் சொந்தக்காரர் காலமான திகதியில் இருந்து 6 மாத காலத்தினுள் காணியின் ஆட்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- பின்னுரிமை நியமனம் செய்யாதிருந்தால் சீவிய உரித்தாளியின் பின்னர் 3 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு வரிசையில் பொருத்தமான ஒருவருக்கு உரிமை மாற்றம் செய்து வழங்கப்படும்.

- இந்த உரிமை மாற்றம் பிரதேச செயலாளரினால் செய்து வழங்கப்படும்.

- சீவிய உரித்தாளி ஒருவர் உரிமை மாற்றம், பின்னுரிமையாளர் நியமனம் போன்றவற்றை செய்வதற்கு எந்த அதிகாரமும் கிடையாது.

- விவாகமாகாத ஒருவர் செய்யும் பின்னுரிமை நியமனம் அவர் விவாகமான திகதியில் இருந்து அந்த நியமனம் தானாக இல்லாது போகும்.

- அனுமதிப்பத்திரதாரர் அல்லது அளிப்பு சொந்தக்காரர் நியமனம் செய்த பின்னுரிமையாளர், அனுமதிப்பத்திரதாரர் அல்லது அளிப்பு சொந்தக்காரர் இறப்பதற்கு முன் காலமானால் புதிய பின் உரிமையாளரை நியமனம் செய்யலாம்.

- அனுமதிபத்திரகாரர் அல்லது அளிப்பு சொந்தக்காரர் பின்னுரிமையாளர் நியமித்தல் அல்லது இரத்து செய்தலை எத்தனை முறையும் செய்யலாம்.

- பின்னுரிமையாளர் நியமித்தல் அல்லது இரத்து செய்வதற்கு LDO அனுமதிப்பத்திரத்திற்கும் அளிப்பு காணிக்கும் LC 155 மூன்று பிரதிகளில் தயாரித்து அதனை மாவட்ட காணி பதிவு காரியாலயத்தில் பதிவு செய்ய வேண்டும். மரண சாசனத்தின் மூலம் நியமித்தல் அல்லது இரத்து செய்ய முடியும்.

- சீவிய உரித்தாளி ஒருவர் மறுதிருமணம் செய்த திகதியில் இருந்து அவரது சீவிய உரித்து இல்லாது போகும். பின்னர் பின்னுரிமையாளர் அல்லது 3ஆம் அட்டவணைப்படி பொருத்தமானவருக்கு உரிமை மாற்றம் செய்யப்படும்.

- அளிப்பு காணியை 3ஆம் அட்டவணைக்கு உட்பட்டவருக்கும் சம வருமானமுடையவருக்கும் மாற்றம் செய்யலாம்.

- இதனை பிரதேச செயலாளரது எழுத்து மூலமான அனுமதி பெற்று நொத்தாரிசு உறுதி மூலம் மாற்றம் செய்யலாம். ஒவ்வொரு முறையும் பிரதேச செயலாளரின் அனுமதி பெறவேண்டும்.

- LDO அனுமதிப்பத்திர காணியை அனுமதிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் ஏதாவது மீறப்பட்டால் இரத்து செய்யலாம்.

- காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் படி ஓர் விசாரணை நடாத்தி நிபந்தனை மீறப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டால் இரத்து செய்யப்படும்.

- பாதிக்கப்பட்ட ஒருவர் தீர்மானம் கிடைக்கப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மாகாண காணி ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்ய வேண்டும்.

- அளிப்பு சொந்தக்காரர் காலமாகிவிட்டால் அக்காணியை உரிமை கோர மரபுரிமையாளர் எவரும் இல்லையென்றால் இரத்து செய்யலாம்.

- நகர, மாநகர எல்லைக்குட்பட்ட எல்லைக்குள் உள்ள அரச காணிக்கு LDO அனுமதிப்பத்திரம் வழங்க முடியாது. அரசகாணிச் சட்டத்தின் கீழ் குத்தகை அடிப்படையில் குத்தகை முறி வழங்கப்படும்.

குடியிருப்புக்கான காணியெனின் கொள்வனவுத் தொகையை (அபிவிருத்தியடையாத பெறுமதி) முழுமையாக செலுத்தி ஓர் பூரண அளிப்பை பெற்றுக்கொள்ளலாம்.

- அரச காணிக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்கள் : LDO அனுமதிப்பத்திரம் , LDO அளிப்பத்திரம், வருடாந்த அனுமதிப்பத்திரம், குத்தகைமுறி, பூரண அளிப்பு, காணி விசேட அளிப்பு.

- சட்ட ஏற்பாட்டின் படி 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கை பிரஜை எவரும் காணி பெறலாம். உச்ச வயதெல்லை கிடையாது.

மூலாதாரம் - எமது நிலம்
மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்,
வடக்கு மாகாணசபை

## தென் துளிர் இதழ் குழு

- திரு F.C சத்தியசோதி (பிரதேச செயலாளர்)
- திருமதி லாகினி நிருபராஜ் (உதவி பிரதேச செயலாளர்)
- திருமதி சுபா தர்சன் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்)
- திருமதி லாவண்யா சதாரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

## மாதாந்த இதழாசிரியர்கள்

- திருமதி சகுந்ததி கருணாசன் (பிமு.சே.உ)
- திருமதி ஜசிந்தா இராகவன் (கா.ப.தி.உ)
- திருமதி கஸ்த்தூரி உமாகாந் (காணி உத்தியோகத்தர்)
- திருமதி லதிதா உதயகுமார் (அ.உ காணி சுவீகரிப்பு)

